இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை
அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான இறுதி ஆய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை

ஒக்டோபர் 2018



பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா,
கு. ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்

centre for poverty analysis

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான இறுதி ஆய்வு

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை

ஒக்டோபர் 2018

பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா மற்றும் ஹசந்தி தென்னகோன்

© வறுமை ஆராய்ச்சி நிலையம்

முதற்பதிப்பு – 2018

ISBN 978-955-3628-43-5

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை(eCRC) ஆய்வின்
கண்டறிவுகள் : இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான
இறுதி ஆய்வு. மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச
செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை / பாசித் ஜனதீன் (et al.). -
கொழும்பு : வறுமை ஆராய்ச்சி நிலையம் 2018,
பக 45 செ.மி. 29

ISBN 978-955-3628-43-5

i. 373.07205493 டிடிசி23 ii. பாசித் ஜனதீன் (இணை ஆசிரியர்)

1. கல்வி இரண்டாம் நிலை - இலங்கை - ஆராய்ச்சி

இப்பதிப்பிற்கான முழு பதிப்புரிமையானது வறுமை ஆராய்ச்சி நிலையத்துக்கே உரிமையானதாகும். இந்நூலின் எந்தவொரு பகுதியும் நூலாசிரியர்/கள் மற்றும் பதிப்பாசிரியர்களின் ஒப்புதலுக்கேற்ப மீள பதிப்பு செய்யப்படலாம்.

ஆய்வுகள், திருத்தப்பட்ட தொகுதிகள், பணி அறிக்கைகள் (working paper), சுருக்கமான ஆவணங்கள் போன்றன தற்போது CEPA வெளியீடுகளில் உள்ளடக்கப்படுகின்றன. இந்த ஆய்வில் வெளியிடப்பட்ட கண்டறிவுகள் மற்றும் பரிந்துரைகள் போன்றன அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொதுச்சேவைப் வழங்குனர்கள் மற்றும் பொதுச்சேவை பெறுநர்களால் வழங்கப்பட்டவைகளாகும். CEPAஅல்லது நன்கொடையாளர்களின் கருத்துகள் அல்லது கொள்கைகளை இந்த ஆய்வானது பிரதிபலிக்கவில்லை.

இந்த பதிப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்வதற்கு:

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 ஆர். ஜீ. சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை
தொலைபேசி: +94(011) 2676955இ 4690200
தொலைநகல்:+94(011) 2676959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

இந்த ஆவணம் ஐரேப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் CEPA இன் முழுப் பொறுப்பாகும் என்பதோடு எந்தவொரு சூழ்நிலையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டினை பிரதிபலிப்பதாக கருதமுடியாது.

# நூலாசிரியர்கள்

### பாசித் ஜனதீன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தர் ஆவார். இவர் கொழும்புப் பல்கலைகழகத்தில் சமூக விஞ்ஞானப் பிரிவில் தனது கலைமாணி பட்டத்தினைப் பெற்றார். பல்வேறு பங்குதாரர் செயன்முறை மற்றும் சமூகக் கற்கைகள் தொடர்பாக நெதர்லாந்து, வாஹனிங்ஹன்பல்கலைக்கழகத்திலிருந்தும்,சமூகப்பொறுப்புடைமைக் கருவிகள் குறிப்பாக, குடிமக்கள் அறிக்கை அட்டை முறைமை தொடர்பாக இந்தியாவில் பெங்களூரிலுள்ள பொதுவிவகாரங்கள் மையத்திடமிருந்தும் சர்வதேச உரிமங்களைப் பெற்றுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில்,திறனைக் கட்டியெழுப்புபவராகவும், வசதிப்படுத்துனராகவும் (Facilitator) பயிற்சியாளராகவும் செயற்படுகின்றார் அதேபோல ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபடுவதோடு ஆய்வு நடவடிக்கை மற்றும் செயன்முறையில் தனது நிபுணத்துவத்தினை கையாளுகின்றார். சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணிபுரிவதில் முக்கியபங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்புக்கூறும் பொறி முறைகள் தொடர்பான திறனைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டல்களை வழங்குவதோடு வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும் பணியாற்றி வருகின்றார். வவுனியா மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுச் செயன்முறைக்கும்,வெளியீட்டிற்கும் வழிவகுத்தார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் சிறந்த நல்லாட்சி மற்றும் சமூகப் பொறுப்புக்கூறும்கருவியாகிய குடிமக்கள் அறிக்கை அட்டையினை வழிநடாத்தி வருகின்றார்.

### இசுரு தென்னகோன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். இவர் தற்போது கொழும்பு பல்கலைகழகத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை பயின்று வருவதோடு பொருளாதாரத்தில் குறிப்பாக பொருளாதாரக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் இளமானி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைகழகத்தில் இருந்து பெற்றுள்ளார். ஆலோசனை உளவியல் தொடர்பில் டிப்ளோமாவை பெற்றுள்ளதோடு ஒரு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். இசுருஒரு கவிஞர் என்பதோடு அவர் இதுவரை மூன்று கவிதை புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவர் முன்பு இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், ஆய்வு உதவியாளராகவும் பணியாற்றியுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், இவர் வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும், தகவல் தொடர்பாடல் குழுவிலும் பணியாற்றி வருகின்றார். இவர் தற்போது குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பில் கவனம் செலுத்துகின்ற ஒரு ஆய்வில் ஈடுபட்டுள்ளதோடு மொனராகலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்விற்கு இவரே கள ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

### மேகலா மகிழ்ராஜா

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தராவார். இவர் பேராதனை பல்கலைகழகத்தில் அபிவிருத்தி நடைமுறைகள் தொடர்பாக முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். அத்தோடு இலங்கை மதிப்பீட்டு (Sri Lanka Evaluation Association -SLEvA)சங்கத்துடன்இணைந்த தேசிய தொழில்துறை நிறுவனத்தில் (National Institute of Labour Studies -NILS)கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் டிப்ளோமா பாடநெறியையும் நிறைவு செய்துள்ளார். இவர், வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் அதேபோல ஆராய்ச்சி போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளதோடு ஆய்வு நடவடிக்கைகளில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது இவர் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணி புரிவதில் முக்கிய பங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்பு பொறிமுறைகள் குறிப்பாக “குடிமக்கள் அறிக்கை அட்டை” எனும் கருவி தொடர்பான திறனை கட்டியெழுப்புவதற்கான ஆதரவினை வழங்குகின்றார். இவர் குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பான ஆய்வில் தனது பங்களிப்பினை வழங்கியதோடு 2014 இல் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பான வெளியீட்டிலும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

### குலசபாநாதன் ரொமேஷன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தராகவும் முகாமைத்துவ குழுவின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் அபிவிருத்தி துறையில் அரசு மற்றும் நிதி நிறுவனங்களுடன் கடந்த 20 வருடங்களாக பணியாற்றியுள்ளார். இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் நிதியியல் பொருளாதாரத்தில் தனது முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். வறுமையின் முகங்கள் தொடர்பாக ஆய்வு செய்கின்ற அணியின் தலைவர் என்ற வகையில்,இவரும் அவரது அணியும்வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளில் பெறப்படுகின்ற வறுமை, சமத்துவமின்மை மற்றும் சுபீட்சம் தொடர்பான விடயங்களை சேகரிப்பதற்கு பொறுப்பானவர்களாவர். மேலும்,வறுமையின் முகங்கள் தொடர்பான குழுவானது வறுமை அளவீடு குறித்து பணியாற்றுவதோடு வறுமை மீது தாக்கம் செலுத்துகின்ற பேரினக் காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

### ஹசந்தி தென்னகோன்

தஸ்மானியா பல்கலைகழகத்தில் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் முதுமாணி பட்டத்தினை பெற்றுள்ளதோடு, பெருநிறுவனங்களின் பேண்தகைமை தொடர்பாக விரிவான அனுபவத்தினை கொண்டுள்ளார். சுற்றுச்சூழல் மற்றும் சமூக பேண்தகைமை தொடர்பான விடயங்களில்இவர் கவனம் செலுத்துகின்றார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கான ஆய்வு ஆலோசகராக கடமையாற்றுவதோடு உலக வங்கியில் சமூக பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்.

## வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) பற்றி

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Center for Poverty Analysis-CEPA),வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை வழங்குகின்ற இலங்கையின் சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். “வறுமை என்பதொரு அநீதியாகும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டியதே” என வறுமை ஆராய்ச்சி நிலையம் நம்புவதோடு அதனை மையப்படுத்தி தனது ஆய்வுகளை முற்படுத்தி வலியுறுத்துகின்றது. அத்தோடு அத்தோடு வறுமையை வெற்றிகொள்வதென்பது தேசிய மற்றும் சர்வதேச ரீதியான கொள்கைகள், நடைமுறைகள் போன்றவற்றில் மாற்றங்களை/ சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதையும் அதேபோல வறுமையிலுள்ள மக்களுடன் இணைந்து செயற்படுவதையும் உள்ளடக்குகிறது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது சுயாதீனமான பகுப்பாய்வு, அபிவிருத்தி வகிபங்காளர்களின் திறனைக் கட்டியெழுப்புதல், மற்றும் கொள்கை அழுத்தங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறிதல் தொடர்பான அம்சங்களை முக்கியத்துவப்படுத்தி வலியுறுத்துகின்றது. சந்தையின் தேவைகளுக்கேற்ப பிரதிபலிக்கின்ற அதேவேளை, பலமான அனுபவரீதியான ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்ட சேவை வழங்குதல் தொடர்பான எமது வலுவான நோக்குநிலையானது எம்மீது செல்வாக்கு செலுத்துகின்றது. வாடிக்கையாளர் கோரிக்கைகளின் மூலம் இந்தசந்தை நோக்குநிலையை வறுமை ஆராய்ச்சி நிலையம் பராமரிக்கின்றது. இறுதியாக தேசியரீதியாக, பிராந்தியரீதியாக, துறைரீதியாக, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் திட்டஅளவில் வறுமையோடு தொடர்புடைய அபிவிருத்திக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்புச் செய்வதற்கு வறுமை ஆராய்ச்சிநிலையம் முயற்சிக்கின்றது. மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையமானது உட்கட்டமைப்பு, குடிப்பெயர்வு, சுற்றுச்சூழல், முரண்பாடு மற்றும் நலினத்துவம் போன்ற ஐந்து பரந்த கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு இணையான சுயாதீன ஆராய்ச்சியினையும் தொடர்கின்றது.

# நன்றியுரை

இந்த ஆய்விற்கு ஆதரவளித்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Centre for Poverty Analysis-CEPA) நன்றி தெரிவிக்க விரும்புகின்றது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது ACTED உடன் இணைந்து மேற்கொண்ட "சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி கூட்டுறவினை உருவாக்குதல்: சிறந்த சமூக நல சேவைகளுக்காக சிவில் சமூக அமைப்புகள் (Civil Society Organizations–CSOs) மற்றும் அரச அதிகாரிகளுக்கிடையிலான ஒத்துழைப்பினை வளர்த்தல்" எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வினை (Citizen Report Card-CRC) வடிவமைப்பதிலும், முன்னெடுப்பதிலும் CEPA முன்னணி வகித்தது.

மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள், ACLGs, பிரதேச சபைகளின் செயலாளர்கள் (Secretaries of Pradheshiya Sabhas-PSs) மற்றும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் வலையக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்வி பணிப்பாளர்கள் (Deputy Directors of Education –DDEs),உத்தியோகத்தர்கள் போன்றோரால் எமக்கு வழங்கப்பட்ட ஆதரவின் மூலம் மற்றும் தரவு சேகரிப்பாளர்களுடன் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் சிவலிங்கம் அனுஷா மற்றும் ஷெஹானா மிர்சா ஆகியோர் வழங்கிய பங்களிப்பினால் இந்த ஆய்வு சாத்தியமானது. இந்த ஆய்விற்கு தேவையான தகவல்களை வழங்கிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் மதிப்புமிக்க பங்களிப்பிற்கு CEPA நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தலுள்ள பின்வரும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் CEPA நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

| தொ.இல | பிரதேச செயலகப் பிரிவு | கிராமசேவகர் பிரிவு | சிவில் சமூக அமைப்புகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | மண்முனை தென்மேற்கு | கடுக்காமுனை | ஆதவன் சமூக மையம் |
| 2 | மண்முனை தென்மேற்கு | அரசடித்தீவு வடக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 3 | மண்முனை தென்மேற்கு | முனைக்காடு மேற்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 4 | மண்முனை தென்மேற்கு | முனைக்காடு வடக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 5 | மண்முனை தென்மேற்கு | கொக்கட்டிச்சோலை | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 6 | மண்முனை தென்மேற்கு | மகிழடித்தீவு தெற்கு | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 7 | கோரளைப்பற்று தெற்கு | கோரக்கள்ளி மடு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 8 | கோரளைப்பற்று தெற்கு | கிராண் கிழக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 9 | கோரளைப்பற்று தெற்கு | தேவபுரம் | நட்சத்திரா மாதர் சங்கம் |
| 10 | கோரளைப்பற்று தெற்கு | திகிலிவேட்டை | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 11 | கோரளைப்பற்று தெற்கு | வாகனேரி | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 12 | போறத்தீவுப்பற்று | செல்வபுரம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 13 | போறத்தீவுப்பற்று | வன்னிநகர் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 14 | போறத்தீவுப்பற்று | மாவேற்குடா | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 15 | போறத்தீவுப்பற்று | கோவில் போறத்தீவு மேற்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 16 | போறத்தீவுப்பற்று | கணேசபுரம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 17 | போறத்தீவுப்பற்று | சின்னவதை | வள்ளுவர் சமூக மையம் |
| 18 | ஏறாவூர் நகரம் | ஐயங்கேணி முஸ்லிம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 19 | ஏறாவூர் நகரம் | மீராக்கேணி | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 20 | ஏறாவூர் நகரம் | மிச்நகர் | கிராம அபிவிருத்தி சங்கம் |

இந்த ஆய்விற்கு தேவையான தகவல்களை வழங்கிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் மதிப்புமிக்க பங்களிப்பிற்கு வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

# சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| ACLG | Assistant Commissioner of Local Government- உள்ளூராட்சி உதவி ஆணையாளர் |
| EU | European Union - ஐரோப்பிய ஒன்றியம் |
| CEPA | Centre for Poverty Analysis- வறுமை ஆராய்ச்சி நிலையம் |
| CSO | Civil Society Organisation – சிவில் சமூக அமைப்பு |
| CRC | Citizen Report Card – குடிமக்கள் அறிக்கை அட்டை |
| eCRC | Electronic Citizen Report Card-இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை |
| DS | Divisional Secretary – பிரதேச செயலகம் |
| DDE | Deputy Director of Education – பிரதி கல்விப் பணிப்பாளர் |
| GNDs | Grama Niladhari Divisions – கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் |
| PS | Pradeshiya Sabha– பிரதேச சபை |
| WRDS | Women's Rural Development Society - மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| RDS | Rural Development Society – கிராம அபிவிருத்தி சங்கம் |
| ZED | Zonal Director of Education – வலயக் கல்விப் பணிப்பாளர் |

# விளக்கப்படங்களின் பட்டியல்


விளக்கப்படம் 1: கிராம சேவகர் பிரிவுக்குள்ளே அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்லல் ........................ 9
விளக்கப்படம் 2: கல்வி தரம் குறித்த ஒட்டுமொத்த திருப்தி ........................ 10
விளக்கப்படம் 3: தனியார் வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் ........................ 11
விளக்கப்படம் 4: ஏறாவூர்பற்று DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு ........................ 12
விளக்கப்படம் 5: போறதீவுப்பற்று DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு ........................ 13
விளக்கப்படம் 6: மண்முனை தென்மேற்கு DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு ........................ 13
விளக்கப்படம் 7: கோரளைப்பற்று தெற்கு DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு ........................ 14
விளக்கப்படம் 8: பாடசாலைகளால் கோரப்பட்ட மேலதிக கட்டணங்கள் ........................ 14
விளக்கப்படம் 9: பாடசாலைக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ........................ 15
விளக்கப்படம் 10: பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்கள் ........................ 15
விளக்கப்படம் 11: மாணவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளின் வகைகள் ........................ 16
விளக்கப்படம் 12: பாடசாலைகளில் இடம்பெறும் பாகுபாடுகள் ........................ 16
விளக்கப்படம் 13: பாடசாலைகளில் நிகழும் துஷ்பிரயோகங்கள் ........................ 17
விளக்கப்படம் 14: ஆசிரியர்கள் தொடர்பான சிக்கல்கள் ........................ 17
விளக்கப்படம் 15: இரண்டாம் நிலை கல்விச்சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு ........................ 19
விளக்கபபடம் 16: ஏறாவூர்பற்று DS பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் ........................ 20
விளக்கப்படம் 17: போறதீவுப்பற்று பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 21
விளக்கப்படம் 18: மண்முனை தென்மேற்கு பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் ........................ 21
விளக்கப்படம் 19: கோரளைப்பற்று தெற்கு பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் ........................ 22

# உள்ளடக்கம்


1. அறிமுகம் 1
1.1. திட்டம் 1
1.2. அறிக்கையின் செயற்பரப்பெல்லை 2
1.3. ஆய்வின் நோக்கங்கள் 2
1.4. மாதிரி வடிவமைப்பு 2
1.5. ஆய்வு முறைமை 4
1.5.1. குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன? 4
1.5.2. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) என்றால் என்ன? 5
1.5.3. குடிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு 6
1.5.4. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல் 7
1.5.5. செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம் 7
1.6. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசம் 8
2. முக்கிய கண்டறிவுகள் 9
2.1. இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல் 9
2.2. இரண்டாம் நிலைக் கல்வி சேவைகளுடனான தரம் மற்றும் திருப்தி 10
2.3. வசதிகள் 11
2.4. மேலதிக கட்டணங்கள் 14
2.5. ஏனைய அசௌகரியங்கள் 15
3. இரண்டாம் நிலை கல்வி வழங்கலுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள் 18
4. பரிந்துரைகள் 20
4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 20
4.1.1. உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 20
4.1.2. மேம்பாட்டிற்கான பரிந்துரைகள் 22
4.1.3. ஏனைய பரிசீலனைகள் 22
4.2. முன்னோக்கிய நகர்வு 23

# 1. அறிமுகம்

## 1.1. திட்டம்

சேவை வழங்குநர்களின் பொறுப்புணர்வினை உறுதிசெய்கின்ற அதேவேளை சிறந்த அணுகல் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குநர்களுடன்) ஒத்துழைக்க சிவில் சமூக அமைப்புகளை பலப்படுத்த வேண்டும் என்பதே *"சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக நல சேவைகளுக்காக சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிளுக்கிடையில் உள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்"* எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் நோக்கமாகும். பின்வரும் திட்ட முடிவுகளை அடைவதற்கு ACTED மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) ஒத்துழைப்பு வழங்குகின்றன. 2018 ஆம் ஆண்டு ஜனவரி – பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலாம் கட்ட ஆய்வானது, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள இரண்டாம் நிலைக் கல்விச் சேவை வழங்கல் தொடர்பான அடிப்படை தரவுகளை வழங்கியபோதிலும், இத்தரநிலை மதிப்பீட்டு ஆய்வானது (இரண்டாம் கட்ட ஆய்வு) முதலாம் கட்ட ஆய்வில் ஆராயப்பட்ட கல்விச்சேவை வழங்கலின் முன்னேற்றத்தை மேற்பார்வையிட 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

ACTED பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது (RI & R2):

- R1 – தமது பணிப்பாணைகள் மற்றும் உள்ளூர்சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான திறன் போன்றவற்றினை செயற்படுத்துவதற்கான சிவில் சமூக அமைப்புகளின் ஆற்றலை மேம்படுத்துதல்.

- R2 –சமூக சேவைகள் என்ற அடிப்படையில் உள்ளூர் தேவைகள் மற்றும் இடைவெளிகள் போன்றன பல "பங்குதாரர்கள் பங்களிப்பு அணுகுமுறை" மூலமாகவும்,சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகள் மூலமாகவும் அடையாளம் காணுதல்.

CEPA பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது(R3):

- R3 – சேவை வழங்குநரின் சிறந்த பொறுப்புடைமையினை மேம்படுத்துவதற்காக சமூக சேவை வழங்கல்/தரம் குறித்த மேம்பட்ட கண்காணித்தல் மற்றும்பிரதானமாக சிறந்த நடைமுறைகளை பரவலாக்குதல்.

இதில் CEPA ஆல் ஏராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன அவையாவன:

- பல்வேறு மட்டங்களில் பொதுச்சேவை வழங்குநர்களை அடையாளப்படுத்தல்
- இலக்கிடப்பட்ட சிவில் சமூக அமைப்புகளிலிருந்து தரவு சேகரிப்பவர்களை தேர்தெடுத்தல்,
- குடிமக்கள் அறிக்கை அட்டை செயன்முறை தொடர்பாக தரவு சேகரிப்பாளர்களை பயிற்றுவித்தல்,
- வினாகொத்தினை வடிவமைத்தல் மற்றும் தரவு சேகரித்தல் போன்றவற்றை வசதிப்படுத்தல்,
- அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குநர்களுடன்) கண்டறிவுகளை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இடைவெளிகளை நிரப்புவதற்கான செயற்பாடுகளை விருத்தி செய்வதில் அவர்களுக்கு ஆதரவளித்தல்.

## 1.2. அறிக்கையின் செயற்பரப்பெல்லை

**மட்டக்களப்பு** மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் இரண்டாம் நிலை கல்வி வழங்கலுக்கான eCRC இன் இரண்டாம் கட்ட ஆய்வுக் கண்டறிவுகளை (தரநிலை மதிப்பீட்டு ஆய்வு) இவ்வறிக்கையானது உள்ளடக்குகின்றது. **ஏறாவூர்பற்று, போறத்தீவுபற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு** ஆகிய DS (பிரதேச செயலகம்) பிரிவுகளில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி - பெப்ரவரி மாதம் நடாத்திய ஆய்வின் தொடர்ச்சியாக செப்டெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் கண்டறிவுகளை இது உள்ளடக்குகின்றது.

## 1.3. ஆய்வின் நோக்கங்கள்

- ஆய்வின் குறிப்பிட்ட நோக்கங்களாவன:
  (i) பொது சேவைகளின் உண்மையான பயனர்களின் அணுகல், மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுகின்ற கருவியாகவும் அதேபோல அரசாங்க அதிகாரிகளின் (சேவை வழங்குநர்களின்) சமூக பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் குடிமக்கள் அறிக்கை அட்டையைப் பயன்படுத்துதல்.
- (ii) இந்த ஆய்வின் கண்டறிவுகளை செயற்பாடுகளுக்கு சார்பாக பரப்புவதோடு அம்முடிவுகளை செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறை சீர்த்திருத்த நடவடிக்கைகளைமேற்கொள்ள பயன்படுத்துதல்,
- (iii) ஏனைய மாவட்டங்களிலுள்ள ஏனைய பொது நிறுவனங்கள் மேற்கொள்ளும் இதுபோன்ற முயற்சிகளுக்காக, தற்போது சேவைகளை பெறும் பயனர்களிடமிருந்து பெறப்பட்ட இவ்வனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

## 1.4. மாதிரி வடிவமைப்பு

ஒரு சேவையைப் பயன்படுத்துகின்ற மக்களின் வீதம், ஒரு சேவையுடன் மக்கள் கொண்ட திருப்தியின் வீதம் போன்ற தகவல்களைப் பிரித்தெடுப்பதனூடாக தரப்பட்ட ஆய்வுப் பிரதேசம் ஒன்றில் சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு இரண்டு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. குழுவிலுள்ள ஒவ்வொரு தனிநபரையும் பரீட்சித்து பார்த்தல் மற்றும் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கண்டறிவுகளை ஒருங்கிணைத்தல் போன்றன ஒரு முறையாகும். இம்முறையானது, முழுமையான கணக்கெடுப்பு அல்லது குடித்தொகை கணக்கெடுப்பு என்றழைக்கப்படுகின்றது. பாரியளவான சனத்தொகையிலிருந்து ஒரு உபதொகுதியினை தெரிவு செய்து அந்த உபதொகுதியிலிருந்து பொருத்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான மற்றொரு வழியாகும். இம்முறையானது "மாதிரியாக்கல்" எனவும் தெரிவுசெய்யப்பட்ட உபதொகுதி "மாதிரி" எனவும் அழைக்கப்படுகின்றது. மிகவும் செலவு குறைந்ததாக மற்றும் குறைந்த ஊழிய செறிவினைக் கொண்டிருப்பதால் இந்த ஆய்வில் "மாதிரியாக்கல் ஆய்வு" முறையொன்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

நம்பகமான மற்றும் துல்லியமான தரவானது,மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலேயே தங்கியுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் வாழுகின்ற மொத்த சனத்தொகையின் மாறுபாடுகள் மற்றும் பண்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கின்ற போது ஒரு மாதிரியானது சிறந்ததாக அமைகின்றது.

இரண்டு வகையான சேவைகளுக்காக eCRC முன்னெடுக்கப்பட்டது. ஒன்று இரண்டாம் நிலை இலவசக்கல்வி மற்றொன்று பிரதேச சபை சேவைகள் என்பனவாகும். முல்லைத்தீவு, மட்டகளப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ACTED மூலம் தெரிவுசெய்யப்பட்ட 60 GN பிரிவுகளை eCRC உள்ளடக்கியுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 60 GNகளில் 1200 குடும்பங்கள் அல்லது ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள 20 GN பிரிவுகளில் 400 குடும்பங்கள் என ஆய்விற்கான மாதிரியளவு தீர்மானிக்கப்பட்டது. 20 GN பிரிக்கும் 400 குடும்பங்கள் எனும் மாதிரியளவானது பின்னர் ஒவ்வொரு GN பிரிவின் உண்மையான சேவைப் பெறுநர்களின் எண்ணிக்கையின் படி பிரிக்கப்பட்டுள்ளன.


மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை போன்ற மூன்று மாவட்டங்களிலும் மாதிரி வடிவமைப்பு செயன்முறையானது பல கட்டங்களில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில்,கிராமசேவகர் பிரிவுக்குள் காணப்படுகின்ற குடும்பங்களின் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு,சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் மூலம், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் பாடசாலைக்கு செல்லும் (தரம் 5 – தரம் 13 வரை) வயதுடைய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, பட்டியலிடப்பட்டன. இவற்றுள், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளுக்காக கணக்கிடப்பட்ட மாதிரியளவினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்விற்கான குடும்பங்களைப் பிரிதிநிதித்துவப்படுத்தும் மாதிரியானது எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டது. அதேவேளை பிரதேச சபை சேவைகள் தொடர்பான ஆய்விற்கென, மாதிரியானது ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை உள்ளடக்கிய குடும்பங்களில் இருந்து பெறப்பட்டதோடு பிரதேச சபையினால் வழங்கப்படும் குறைந்தது ஒரு சேவையையாவது கடந்த ஒருவருட காலத்தில் பயன்படுத்திய அல்லது பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற குடும்பங்களாக இருக்க வேண்டும் என்ற அளவுகோலின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. கிராமசேவகர் பிரிவிலுள்ள அனைத்து கிராமங்களையும் பிதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் பரந்தளவிலான பகுதிகளை உள்ளடக்கி இன ரீதியிலான விகிதாரம் எனும் கண்ணோட்டத்தினை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிகளில் இருந்தும் மாதிரி வடிவமைப்பானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அனைத்து தரப்பரிசோதனைகளையும் தொடர்ந்து மூன்று மாவட்டங்களிலுள்ள 60 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 1200 குடும்பங்கள் மாத்திரமே (மட்டக்களப்பு மாவட்டத்தில் 400, மொனராகலை மாவட்டத்தில் 400 மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 400) பகுப்பாய்விற்கென தீர்மானிக்கப்பட்ட மாதிரிகளாகும்.

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, முடியுமானவரை முதலாம் கட்டத்தில் ஆய்வுசெய்யப்பட்ட அதே குடும்பங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டன. இருப்பினும், அதே குடும்பங்களை ஆய்விற்குட்படுத்த வேண்டுமென்ற தேவை இருக்கவில்லை அல்லது தரவு சேகரிப்பாளர்கள் அதே குடும்பங்களுக்குச் செல்ல வேண்டுமென முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. முதலாம் கட்ட ஆய்வில் பங்கேற்ற குடும்பங்கள் இக்குறிப்பிட்ட ஆய்வின்போது பங்கேற்றனரா இல்லையா என்பது கருத்தில்கொள்ளாமல், ஆய்வுப்பகுதியிலுள்ள அனைத்து குடும்பங்களில் இருந்தும் பெறப்பட்ட கருத்துக்களானவை, முழு சமூகத்தையும் உள்ளடக்கிய வகையில் வழங்கப்படுகின்ற சேவைகளின், முன்னேற்றம் தொடர்பான முடிவுகளை வரையறுப்பதற்கு போதுமானதாக இருக்கின்றன.

பின்வரும் மாதிரியாக்கல் கூறினை (sampling matrix) அடிப்படையாகக் கொண்டு மாதிரியாக்கம் முன்னெடுக்கப்பட்டது:

| சனத்தொகை (குடும்பங்கள்) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (95 % நம்பிக்கையாயிடை) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (90 % நம்பிக்கையாயிடை) |
|---|---|---|
| 100 | 80 | 66 |
| 500 | 217 | 141 |
| 1000 | 278 | 164 |
| 5,000 | 357 | 189 |
| 10,000 | 370 | 192 |
| 30,000 | 379 | 195 |
| 50,000 | 381 | 195 |
| 100,000 | 383 | 196 |
| 200,000 | 383 | 196 |

கீழே தரப்பட்ட செயற்கைகோள் படமானது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளின் பரவலாக்கத்தினை காட்டிநிற்கின்றது.




## 1.5. ஆய்வு முறைமை

### 1.5.1. குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன?

குடிமக்கள் அறிக்கை அட்டையானது (Citizen Report Cart-CRC),பொது சேவைகளின் செயற்திறன் குறித்து பயனர்களிடமிருந்து முறையான மற்றும் உண்மையான கருத்துக்களை பெறக்கூடிய ஒரு எளிமையான, சக்திவாய்ந்த கருவியாகும். இது உண்மையான பயனர்களிடம் இருந்து பொது சேவைகளின் தரம் மற்றும் போதுமான்தன்மை தொடர்பான கருத்துக்களை சேகரிக்கின்ற ஒரு பங்கேற்பு ஆய்வாகும். சேவை வழங்குநர்களுடன் ஒரு உரையாடலில் ஈடுபடுவதற்கு மற்றும் பொது சேவை வழங்கலை முன்னேற்றுதற்காக அவர்களை பொறுப்புணர்வுடன் இருக்கச்செய்வதற்கு சமூகங்கள், சிவில் சமூக அமைப்புகள் (CSOக்கள்) அல்லது உள்ளூர் அரசாங்கங்களுக்கான பலமான மற்றும் செயற்திறன் வாய்ந்த ஒரு அணுகுமுறையினை CRC வழங்குகின்றது. ஆரம்பத்தில் CRC நகர்ப்புற சூழ்நிலைகளில் நடத்தப்பட்டிருந்தாலும், இப்போது பரந்தளவிலான புவியியல் மற்றும் துறைசார்ந்த சூழ்நிலைகளில் பொது சேவை வழங்கலின் நிலையைப் புரிந்துகொள்ள இது உதவுகின்றது.

CRC பல நன்மைகளை வழங்குகின்றது. சேவை வழங்குநர்கள் தாங்கள் வழங்குகின்ற பொதுச் சேவைகளானது பொதுமக்களை குறிப்பாக, போதிய வசதிகளற்ற உறுப்பினர்களை சென்றடைவதற்கான குறைந்த செலவுடைய வழிமுறையை கண்டறிய உதவுகின்றது. இதனையொட்டி, பொது சேவை பயனர்கள் தாங்கள் பெற்றுக்கொள்கின்ற சேவைகளின் தரம், செயல்திறன், மற்றும் போதியதன்மை குறித்தும் அதேபோல சேவை வழங்குனர்களுடன் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் தமது கருத்துக்களை உள்ளூர் அரசாங்கத்திற்கு தெரிவிக்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. பல்வேறு சேவை வழங்குனர்களில் இருக்கின்ற சந்தர்ப்பங்களில், பல்வேறுபட்ட சேவைகளுக்கிடையில் தமது மதிப்பீடுகளை ஒப்பிடுவது சாத்தியமாகின்றது. இதன் விளைவாக மதிப்பீடானது (பயனர் திருப்தியினை அடிப்படையாகக்

கொண்டது), குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றிற்கான பொது சேவை வழங்கலின் செயற்திறன் தொடர்பான 'அறிக்கை அட்டையாக'மாற்றப்படுகிறது. சேவை வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பொதுவான ஒரு கருத்துக்கணிப்புடன் பொதுச்சேவைப் பெறுநர்களின் அனுபவங்களை பிரதிபலிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் குடிமக்கள் அறிக்கை அட்டையை ஒப்பிட்டு பார்க்க முடியாது. உதாரணமாக, குடிமக்கள் அறிக்கை அட்டைகளை உருவாக்கும் ஆய்வுகளானது, குறிப்பிட்ட சேவைகளைப் பயன்படுத்துகின்ற தனிநபர்களை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கும்.

உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் முதல் 20க்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள அபிவருத்தி பங்காளர்கள் வரையான பல்வேறு நிறுவனங்களில் குடிமக்கள் ஈடுபாடு மற்றும் சேவை மேம்பாடுகளுக்கான ஒரு கருவியாக CRCக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக்கருவி பொதுவாக, குடிமக்கள்-அரசாங்கத்துக்கிடையிலான ஈடுபாட்டின் அடிப்படையில் தரவினை உருவாக்குவதோடு செல்வாக்கு செலுத்தும் பல பகுதிகளில் இதனுடைய பயன்களை விரிவாக்க முடியும். உதாரணமாக, பொதுக் கொள்கைகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் அறிவிப்பதற்கான, அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவை வழங்கல் பொறிமுறைகளை மறுசீரமைப்பதற்கான, மற்றும் அரசாங்க மற்றும் சமூக நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான அடிப்படையாக இது மாற முடியும்.

மட்டகளப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மிகவும் பின்தங்கிய மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசகளில் உள்ள சமூகங்களின் ஈடுபாட்டில் கவனம் செலுத்திய இக்குறிப்பிட்ட ஆய்வில் ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு குரல் கொடுப்பதற்கான ஆற்றல் CRCன் முக்கிய அம்சங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட மற்றும் திருப்திகரமான சேவை வழங்கலை கோருவதற்கு சமூகத்தை வலுப்படுத்தல் மற்றும் சுய நம்பகமானதும் நிலையானதுமான வாழ்க்கைக்கு வழிவகுப்பதற்கு சமூகங்களுக்கு அதிகாரமளித்தலுமே நோக்கமாக இருந்தது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, சமூக அடிப்படையிலான ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை வாய்ந்த சேவைகளை மதிப்பிடுதல் தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) கவனம் செலுத்தியது. வறியோர் சார்பு மற்றும் உரிமைகள் அடிப்படையிலான கண்ணோட்டத்திலிருந்து ஏற்கனவே உள்ள நடைமுறைகள் அதேபோல கொள்கைகளில் அழுத்தங்களை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்தது.

சமூக உள்ளீடுகளுக்கு மேலதிகமாக சேவை பெறுநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடையே ஒரு பயனுள்ள உரையாடலை மேம்படுத்துவதற்காக சேவை வழங்குநர்களிடமிருந்து முகாமைத்துவ ரீதியான பிரதிபலிப்பையும் ஆய்வானது பெற்றுக்கொண்டது. இந்த ஆய்வினை மீள மீள முன்னெடுப்பதன் மூலம் ஆய்வின் நன்மை மேம்படுத்தப்படுவதோடு, முகாமைத்துவ ரீதியான பிரதிபலிப்பில் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் (அல்லது பிற தலையீடுகள்) சேவை பெறுநர்களுக்கான சேவைகளை மேம்படுத்தியதா என்பதை தீர்மானிக்கவும் வழிவகுக்கும்.

## 1.5.2. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (நஊசுஊ) என்றால் என்ன?

தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி, வசதி மற்றும் அதன் சக்திகள் போன்றவற்றினை கையாளக்கூடிய குடிமக்கள் அறிக்கை அட்டைகளை முன்னெடுப்பதற்கான ஒருபுரட்சிகரமான அணுகுமுறையே இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை அல்லது eCRC எனப்படுகிறது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையானது "ஆண்ராய்ட்" அடிப்படையிலான கையடக்கத் தொலைபேசி (Android –based mobile) பயன்பாடுகளினூடக குடிமக்கள் கருத்துக்களின் நம்பகமான சேகரிப்பினை உறுதிப்படுத்துவதோடு சரியான மற்றும் உரிய நேரத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்து அறிக்கையிட முடிகின்றது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை செயன்முறையில் பல கூறுகள் காணப்படுகின்றன:

**(a) ஆய்வினை மேற்கொள்ளுதல்**

பொதுமக்களின் கருத்து மற்றும் அனுபவங்கள் பற்றிய ஒரு அறிவியல் சார் மாதிரி ஆய்வானது, கைப்பேசியொன்றின் பயன்பாட்டினைப் பயன்படுத்தி ஒரு டெப்லெட் (tablet) மூலமாக நடாத்தப்படுகின்றது.

தொலைபேசிகள்/டெப்லெட்களில் உள்ள பூகோள நிலைப்படுத்தல் அமைப்பு முறை (GPS) எனும் கண்காணிப்பு முறை மூலம் தரவு சேகரிப்பின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு, உறுதிப்படுத்தப்படுகின்றது.

**(b) தரக்கட்டுப்பாட்டிற்கான தொலைதூரக் கண்காணிப்பு**

உண்மை நேர அடிப்படையில் ஆய்வின் முன்னேற்றத்தை கண்காணிக்க,ஆய்வு முகாமையாளர்களுக்கு வலைதளத்தை மையப்படுத்திய ஆய்வு முகாமைத்துவ தொகுதி ஒன்று உதவுகின்றது. இத்தொகுதியானது, தொலைதூரக் கண்காணிப்பு, ஆய்வு நடவடிக்கைகளின் முகாமைத்துவம் போன்றவற்றினை செயற்படுத்துவதால், மிகச்சிறப்பான தரக் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றது.

**(c) தரவுப் பகுப்பாய்வு**

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின்ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஆன்லைன் டாஷ் போர்ட் (online dash board) மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற கருவிகளானது, பல்வேறுபட்ட பங்குதாரர் (உதாரணமாக, கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், அரசியல் பிரதிநிதிகள், மற்றும் குடிமக்கள் போன்றோர்) குழுக்களின் தகவல் தேவைகளை அடையாளப்படுத்துகின்றது. விளக்கப்படங்கள் அட்டவணைகள், வரைபடங்கள் ஆகியவற்றின் மூலமாக இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் ஆய்வின் முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன. செயற்திறன் மட்டங்கள் தொடர்பான இலகுவான அனுமானங்களை வழங்குவதற்கு எளிமையான நிறக்குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வினை அறிக்கைப்படுத்துவதற்காக இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை மொபைல் டெப்லெட்கள் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதால் பல நன்மைகள ஏற்படுகின்றன:

- இது மிகவும் துல்லியமான தரவினை உருவாக்குகின்றது.
- உடனடி முடிவுகளை வழங்குகின்றது.
- ஆய்வு நடைபெறும் புவியியல் இருப்பிடத்தினை/தரவு சேகரிக்கப்படுகின்ற புவிப்பரப்பை வரைபடத்தில் காட்டுகின்ற முறையை செயற்படுத்துகின்றது.
- இது ஒரு தடவை முதலீட்டு செலவினைக் கொண்டிருப்பதாலும், நேர விரயத்தினை குறைத்துள்ளதாலும் ஆய்வினை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும்/செயற்படுத்தும் வகையில் இலகுவாக்கப்பட்டுள்ளது.

## 1.5.3. குடிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளுக்கென இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முறையானது வடிவமைக்கப்பட்டது. ஆய்விற்கென அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலின் நிலை மற்றும் பிரதேச சபைகளின் சேவை வழங்கல் போன்றவற்றினை உள்ளடக்கும் வகையில் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட செயலாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்களுடனான கலந்துரையாடலில் ஆய்வு நேரம் மற்றும் ஆய்விற்கு தேவையான வசதிகள் குறித்து முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிவில் சமூக அமைப்புகளின் (CSO) குழு ஒன்றினால் ஆய்வானது நடாத்தப்பட்டது. வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் அதேபோல ACTED கள உத்தியோகத்தர்களின் நேரடி மேற்பார்வையுடன் மூன்று மாவட்டங்களிலும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு மாவட்ட ரீதியாக பயிற்சியளிக்கப்பட்டது.

### 1.5.4. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல்

சமூகம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல்களின் (Focus Group Disscussion-FGDs) போது, (i) பிரதேச சபைகளின் சேவை வழங்கல், (ii) இரண்டாம் நிலைக் கல்விச்சேவை (தரம் 5 – தரம் 13) வழங்கல் ஆகிய இரண்டு சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டிய சேவைகளாக முன்னுரிமைப்படுத்தப்பட்டது. இந்த முன்னுரிமைகளானது, ACTED கிராம அபிவிருத்தி திட்டங்களில் (Village Development Plans-VDPs) சுட்டிக்காட்டப்பட்ட முன்னுரிமைகளுடன் ஒத்திருந்தது.

இவற்றில், சமூகம் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூலமாக வழங்கப்பட்ட தரப்படுத்தல்களின் மூலம் மேம்பாட்டிற்கான முன்னுரிமைப் பகுதிகள் அடையாளங்காணப்பட்டன.

கல்விச் சேவைகளைப் பொறுத்தவரை, சமூகத்துடன் மேற்கொள்ளப்பட்ட இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலைக் கல்வி முன்னுரிமையுடையதாக அடையாளம் காணப்பட்டது.

### 1.5.5. செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம்

மூன்று மாவட்டங்களிலுமுள்ள சமூக குழுக்கள், வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலை கல்விச் சேவைகளுக்கான குறிப்பிட்ட குறிகாட்டிகளின் தொகுப்பொன்று அடையாளம் காணப்பட்டது. இரண்டாம் நிலை கல்விச் சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் செயற்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டன:

| இரண்டாம் நிலைக் கல்வி சேவை வழங்கலின் அம்சங்கள் | குறிகாட்டிகள் |
|---|---|
| அணுகல் | • கிராமசேவகர் பிரிவுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பாடசாலைக்குச் செல்லுதல்<br>• பாடசாலைக்கு சீராக வருகை தருதல்<br>• வருகை தராமைக்கான காரணங்கள்<br>• தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தருதல் |
| தரம் | • தரத்துடனான திருப்தி |
| வசதிகள் | • கிடைக்கும் தன்மை<br>• திருப்தி |
| ஆசிரியர்கள் | • கிடைக்கும் தன்மை<br>• ஆசிரியர்களின் தரம்<br>• ஆசிரியர்களின் நடத்தை<br>• கற்பித்தல் அணுகுமுறை |
| அசௌகரியங்கள் | • தண்டனைகள்<br>• துஷ்பிரயோகம்<br>• பாகுபாடு<br>• மறைமுக செலவுகள் |

## 1.6. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசம்

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, போறத்தீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பிரதேச சபைகள் மற்றும் கல்வி வலய அலுவலங்களுக்குட்பட்ட பல பிரதேசங்களை இந்த ஆய்வானது உள்ளடக்கியுள்ளது.

| பிரதேச செயலகபிரிவு/பிரதேச சபை/ வலயக்கல்வி அலுவலகம் | கிராமசேவகர் பிரிவு (GNs) | கிராமங்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஏறாவூர்நகர் பிரதேச செயலகப் பிரிவு / ஏறாவூர்பற்று பிரதேச சபை / மட்டகளப்பு மத்திய வலயக் கல்வி அலுவலகம் | மீராக்கேணி | 9 | 1485 |
| | மிச்நகர் | 7 | 2063 |
| | ஐயங்கேணி முஸ்லிம் | 3 | 840 |
| போறத்தீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவு / போறத்தீவுப்பற்று பிரதேச சபை / வெள்ளாவெளி–பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம் | சின்னவத்தை | 3 | 435 |
| | கணேசபுரம் | 1 | 420 |
| | கோவில் போறத்தீவு மேற்கு | 1 | 415 |
| | வன்னிநகர் | 1 | 409 |
| | மாவேற்குடா | 3 | 434 |
| | செல்வபுரம் | 1 | 337 |
| மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவு / மண்முனை தெற்கு பிரதேச சபை /பட்டிப்பளை – மட்டகளப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் | கடுக்காமுனை | 5 | 480 |
| | அரசடித்தீவு வடக்கு | 2 | 308 |
| | மகிழடித்தீவு தெற்கு | 3 | 576 |
| | முனைக்காடு மேற்கு | 4 | 327 |
| | முனைக்காடு வடக்கு | 2 | 369 |
| | கொக்கட்டிச்சோலை | 3 | 586 |
| | கிராண் கிழக்கு | 3 | 1197 |
| | கோரக்கள்ளிமடு | 3 | 677 |
| | தேவபுரம் | 2 | 656 |
| | திகிலிவேட்டை | 5 | 423 |
| கோரளைப்பறறு தெற்கு பிரதேச செயலகப் பிரிவு/ஓட்டமாவடி பிரதேச சபை/ கல்குடா வலயக் கல்வி அலுவலகம் | வாகனேரி | 5 | 462 |


# 2. முக்கிய கண்டறிவுகள்

இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல், கல்வித் தரம்,வசதிகள் மற்றும் ஆய்வுப் பகுதியிலுள்ள இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பான தரவுகளை eCRC ஆய்வு சேகரித்தது. 2018 ஆம் ஆண்டு -செப்டம்பர்- ஒக்டோபர் மாதங்களில் இந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தை பின்வரும் பிரிவுகள் முன்வைக்கின்றன. முதலாம் கட்ட eCRC ஆய்வில் சேகரிக்கப்பட்ட அடிப்படை தரவுகள் மற்றும் இரண்டாம் கட்ட eCRC ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் முறையே முதலாவது கட்ட ஆய்வு (ஆய்வு 1) மற்றும் இரண்டாவது கட்ட ஆய்வு (ஆய்வு 2) என குறிப்பிடப்படுகின்றன.

## 2.1. இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல்

கீழே தரப்பட்டுள்ள விளக்கப் படம் 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, இரண்டாம் கட்ட ஆய்வின் போது ஒரு சொந்த GN பிரிவுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் சதவீதம் நான்கு DS பிரிவுகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இருப்பினும் இரண்டாம் கட்ட eCRC ஆய்வுக்காக முதலாம் கட்ட eCRC ஆய்வில் பங்கேற்ற அதே குடும்பங்களிலிருந்து தரவு சேகரிக்கப்படவில்லை. சிலவேளைகளில் பதிலளித்தவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் தரவு சேகரிப்பவர்கள் வெவ்வேறு குடும்பங்களுக்கு சென்றனர். இதனால் மேலும் உள்ளகத்தில் வசிக்கும் குடும்பங்களை இரண்டாம் கட்ட eCRC ஆய்வில் உள்ளடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ் உள்ளகத்தன்மையின் பாரணமாக இப்பிரிவிலுள்ள குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளைச் சொந்த GN பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இரண்டாம் கட்ட ஆய்வின்போது அதிகமான மாணவர்கள் தங்கள் சொந்த GN பிரிவுகளுக்குள்ளேயே கல்வி பயில்கின்றனர் என தெரிகின்றது.

**விளக்கப்படம் 1: கிராம சேவகர் பிரிவுக்குள்ளே அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்லல்**




கிராம சேவகர் பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு வருகை தருவதற்கான காரணங்களை ஆராய்கின்றபோது பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட தரம் வரையான வகுப்புகள் (தரம் 5 அல்லது 11) மட்டுமே GN பிரிவிற்குள் அமைந்துள்ள பாடசாலைகளில் நடாத்தப்படுகின்றமையின் காரணமாக மாணவர்கள் GN பிரிவிற்கு வெளியிலுள்ள பாடசாலைக்குச் செல்லவேண்டியுள்ளதாக முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வுகளின் போது குறிப்பிட்டிருந்தனர். தேவையான வசதிகளின் பற்றாக்குறை காரணமாகவும் GN பிரிவிற்கு வெளியிலுள்ள பாடசாலைக்கு செல்வதாக அதிகளவானோர்


குறிப்பிடடிருந்தனர். GN பிரிவில் உள்ள பாடசாலைகளில் சில பாடப்பிரிவுகள் இல்லாமை (உதாரணமாக விஞ்ஞான பிரிவு, கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு) காரணமாக இப்பாடப் பிரிவுகளை வழங்குகின்ற GN பிரிவிற்கு வெளியே உள்ள பாடசாலைக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது என அதிகமானோர் குறிப்பிட்டிருந்தனர்.

## 2.2. இரண்டாம் நிலைக் கல்வி சேவைகளுடனான தரம் மற்றும் திருப்தி

பெற்றோர்கள் மற்றும் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட திருப்தியினையே **விளக்கப்படம் 2** சுட்டிக்காட்டுவதோடு முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வின் போதான திருப்தியின் அளவை ஒப்பீடு செய்கின்றது. நான்கு DS பிரிவுகளிலும் பதிலளித்த பதிலளிப்பாளர்களில் பெரும்பாலானோர் கல்வியின் தரம் தொடர்பில் உயர்ந்தளவான திருப்தியையோ அல்லது ஓரளவான திருப்தியையோ கொண்டுள்ளனர். இரண்டாம் கட்ட ஆய்வின்போது, ஏறாவூர் பற்று பிரிவில் அதிகளவான திருப்தி மட்டமானது குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ள அதேவேளையில் ஏனைய மூன்று பிரிவுகளில் சிறதளவு வித்தியாசத்தை மட்டுமே காணக்கூடியாதாகவும் உள்ளது. அத்துடன் இரண்டாம் கட்ட ஆய்வின்போது கோரளைப்பற்று பிரிவில் குறைந்தளவான திருப்தி மட்டமானது சற்று அதிகரித்துள்ளது. திருப்தி மட்டங்கள் குறைவடைந்தமைக்கான பொதுவாக குறிப்பிடப்பட்ட காரணங்கள் பின்வருமாறு

- குறிப்பிட்ட பாடங்களை கற்பிப்பதற்கு பொருத்தமான ஆசிரியர்களின் பற்றாக்குறை.
- ஆசிரியர்கள் உரிய நேரத்துக்கு வருகை தராமை மற்றும் சில சமயங்களில் முன்னராக செல்லுதல்
- வரையறுக்கப்பட்ட பேரூந்து சேவைகள் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை வீதிகளை அணுகுவதில் உள்ள மோசமான நிலைமைகள் காரணமாக ஏற்படுகின்ற போக்குவரத்துச் சிக்கல்களினால் ஆசிரியர்களின் வருகை பாதிக்கப்படுகின்றது.
- மேலதிக வகுப்புகளுக்கான வாய்ப்புகள் இன்மை மற்றும் தேசிய மட்ட நிகழ்வுகளின்போது, மேலதிக கல்வி சாரா விடயங்களில் (விளையாட்டு, கழக அங்கத்துவம், போட்டிகள்) ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இன்மை
- செய்முறை வகுப்புகள் திருப்திகரமான வகையில் நடாத்தப்படாமை
- தரம் 9 வரை மட்டுமே வகுப்புகள் நடைபெறுகின்றமை
- பாடசாலையில் அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை
- சிலசமயங்களில் பெண் ஆசிரியர்கள் மிகவும் உள்ளக பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்வதனை விரும்பாமை


**விளக்கப் படம் 2: கல்வி தரம் குறித்த ஒட்டுமொத்த திருப்தி**



பொதுவாக நோக்கும் போது, திருப்தி நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற முதலாம் கட்ட ஆய்வின் போது சேவைகள் தொடர்பாக இருந்த நேர்மறையான தோற்றப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட திருப்தி குறித்து விளக்கமளிக்கின்றது. தமது கல்வி எதிர்பார்ப்புகள் தொடர்பில் அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் தடைகள் காரணமாக சேவைகள் தொடர்பானன நேர்மறை தோற்றப்பாடு குறைவடைந்திருப்பதை இரண்டாம் கட்ட ஆய்வானது வெளிப்படுத்துகிறது. போக்குவரத்து சார்ந்த சிக்கல்கள், மழைகாலங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றன எதிர்நோக்கப்படும் சவால்களில் உள்ளடக்கப்படுகிறன.

நான்கு பிரிவுகளிலும் இருந்து தனியார் வகுப்புகளிற்கு சமுகமளிக்கும் மாணவர்களின் விகிதாசாரமானது **விளக்கப்படம் 3** இல் காட்டப்பட்டுள்ளது. மேலதிக அறிவினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு, பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படாமை, பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதை புரிந்துகொள்வதிலுள்ள கஷ்டங்கள், ஆசிரியர்கள் போதுமான கவனத்தை செலுத்தாமை மற்றும் நண்பர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வதால் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கபடுதல் போன்றன மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வதற்கான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டன. நான்கு மாத காலத்தில் ஏறாவூர்பற்று மற்றும் கோரளைப்பற்று தெற்கு பிரிவுகளில் தனியார் வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்களின் விகிதம் கணிசமானளவு குறைவடைந்துள்ளதை விளக்கப்படம் குறித்து நிற்கிறது. அத்துடன் போறத்தீவுபற்று பிரிவில் சிறியளவு வீழ்ச்சியையும் காணமுடிகிறது. பரீட்சை காலங்கள் நெருங்கும் போது பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதால் தனியார் வகுப்புக்கு செல்வதற்கான தேவை குறைவடைந்தமையே இந்த நிலைமைக்கான காரணமாகும்.

**விளக்கப்படம் 3: தனியார் வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**




## 2.3. வசதிகள்

**விளக்கப்படங்கள் 4, 5, 6 மற்றும் 7** ஆகியவை ஏறாவூர்பற்று, போறத்தீவுபற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற DS பிரிவுகளில் உள்ள இரண்டாம் நிலைக் கல்விக்கான வசதிகள் தொடர்பான ஒட்டுமொத்த திருப்தியைக் காட்டி நிற்கின்றது.


ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சேவைகளில் கூடுதலானவை ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான மாணவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற போதிலும் மதிய உணவு, சமையலறை வசதிகள் மற்றும் சுரக்ஷா காப்புறுதி போன்ற வசதிகளின் கிடைக்கும் தன்மையில் சில கவனிக்கத்தக்க இடைவெளிகள் இருப்பதை நான்கு பிரிவுகளிலும் அவதானிக்க முடிகிறது. எனினும் சுரக்ஷா காப்புறுதியின் கிடைக்கும் தன்மை கடந்த நான்கு மாதங்களில் அதுகரித்துள்ளது. ஆனாலும் ஏறாவூர்பற்று மற்றும் கோரளைப்பற்று தெற்கு பிரிவுகளில் இன்னும் பின்தங்கியே காணப்படுகின்றது. ஏறத்தாள 75% இற்கும் குறைவான மாணவர்களே தமக்கான காப்புறுதியின் கிடைக்கும் தன்மை பற்றி குறிப்பிட்டுள்ளனர். சுரக்ஷா காப்புறுதி திட்டமானது இலங்கையில் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கப்பெற வேண்டிய ஒரு வசதியாகும். இரண்டாம் கட்ட ஆய்வில் முக்கியமாக சுரக்ஷா காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அதே சமயத்தில் சில பதிலளிப்பாளர்கள் இவ்வசதி பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அவர்களுக்கு காப்பீடு கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே,

இவ்வசதியின் கிடைப்பனவு குறித்து அனைத்து மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தினை இது குறிக்கின்றது இதனால், மாணவர்கள் இந்நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியடைவர் குறிப்பாக, வசதிகள் குறைந்த பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிக பயன் அடைவார்கள்.


மதிய உணவினைப் பொறுத்தவரையில், ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அல்லது 100 மாணவர்களுக்கும் குறைவாக இருக்கின்ற பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கப்படும். இது இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்படாததால், ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் இந்த வசதி குறைவாக இருந்தமையை ஆய்வு பிரதிபலித்தற்கு இதுவே காரணமாகும். இருப்பினும், ஆரம்ப நிலை பாடசாலைகளில் உள்ள தமது இளைய சகோதரர்கள் மதிய உணவினைப் பெற்றுக்கொள்வதால் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் மதிய உணவினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு எதிர்பார்ப்பு இருப்பதாக தெரிகின்றது.

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, பாடசாலை மாணவர்களில் கிட்டத்தட்ட 100 சதவீதமானவர்கள் சீருடைகளுக்கான கூப்பன்கள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதோடு, முன்பு சீருடைக்கான துணிகளைப் பெற்றுக்கொண்டதற்கு எதிராக கூப்பன்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. சில மாணவர்கள் சப்பாத்துகள் அல்லது வேறு ஆடை வகைகள் போன்ற பிற தேவைகளை வாங்குவதற்கு கூப்பன்களை பயன்படுத்தியுள்ளனர். மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் கூப்பன்களைப் பயன்படுத்தி சீருடைகள்/பொருட்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வணிக நிலையங்களை அடைய ஒரு குறிப்பிட்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால், இது அம்மாணவர்களுக்கு அல்லது பெற்றோருக்கு கடிமானதாக (போக்குவரத்துச் செலவு, பயண நேரம், காலவிரயம்- கூலித்தொழிலாளிகளுக்கு), அமையக்கூடும் என்பது சீருடை கூப்பன்களில் காணப்படுகின்ற பிரதிகூலமாக அமைகின்றது.


**விளக்கப்படம் 4: ஏறாவூர்பற்று DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




**விளக்கப்படம் 5: போறத்தீவுப்பற்று DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




**விளக்கப்படம் 6: மண்முனை தென்மேற்கு DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




**விளக்கப்படம் 7: கோரளைப்பற்று தெற்கு DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




## 2.4. மேலதிக கட்டணங்கள்


குறிப்பிடத்தக்க அளவு மாணவர்கள் தமது பாடசாலைகளுக்கு பல்வேறு கட்டணங்களை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் மேலதிக செலவுகள் ஏற்படுகின்றன என்பதையும் eCRC ஆய்வானது வெளிப்படுத்துகின்றது. **விளக்கப்படம் 8** இல் காட்டப்பட்டுள்ளபடி, கேட்கப்பட்ட கட்டணங்கள் பெரும்பாலும் பணமாக இருந்தாலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டனர். நான்கு பிரிவுகளிலும் மேலதிகள் கட்டணங்கள் செலுத்தும்படி கோரப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை இரண்டாம் கட்ட ஆய்வு காட்டுகிறது.

**விளக்கப்படம் 8: பாடசாலைகளால் கோரப்பட்ட மேலதிக கட்டணங்கள்**



பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மாணவர்கள் கட்டணங்களை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுகளை பெற்றிருந்தாலும், **விளக்கப்படம் 9** இல் குறிப்பிடப்பட்டிருப்பது போல ஒரு குறிப்பிடப்பட்டளவான மாணவர்கள் பற்றுச்சீட்டுகள் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இரண்டாம் கட்ட ஆய்வின் போது, தாங்கள் செலுத்திய பணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தாலும், அவர்களுடைய சட்டப்பூர்வமான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய பரிமாற்றங்களுக்கு விசாரணைத் தேவைப்படலாம்.


**விளக்கப்படம் 9: பாடசாலைக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள்**




## 2.5. ஏனைய அசௌகரியங்கள்


ஆய்வு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களில் சிலர் அவர்களுடைய பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்களை எதிர்கொண்டதாக குறிப்பிட்டனர் (**விளக்கப் படம் 10** ஐப் பார்க்கவும்). மாணவர்கள் தண்டனைகளை எதிர்கொள்வது தொடர்பில் கோரளைப்பற்று தெற்கு DS பிரிவு சிறியளவான அதிகரிப்பை காட்டுகிற அதே நேரம் மண்முனை தென்மேற்கு மற்றும் போறதீவுப்பற்று DS பிரிவுகள் சிறியளவிலான சரிவைக் காட்டி நிற்கிற அதேசமயத்தில் இந்த விடயம் தொடர்பாக ஏறாவூர் பற்று DS பிரிவில் எந்தவித மாற்றமும் அவதானிக்கப்படவில்லை.

**விளக்கப்படம் 10: பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்கள்**




இரண்டு கட்டங்களிலும் தண்டனைகள் தொடர்பான சிக்கல்களில் உடல் ரீதியான தண்டனைகளைப் பெறுகின்றமை தொடர்பாக தெரிவித்த மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருப்பதை **விளக்கப்படம் 11** காட்டி நிற்கிறது. இரண்டாம் கட்ட ஆய்வின் போது ஏறாவூர் பற்று, மண்முனை தென்மேற்கு மற்றும் கோரளைப்பற்று தெற்கு ஆகிய பிரிவுகளில் இந்த தண்டனை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. பாடசாலைகளில், உடல் ரீதியான தண்டணைகள் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தாலும் இந்நான்கு DS பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்கு அடிக்கடி வழங்கப்படும் தண்டனை முறையாக இது காணப்படுகின்றது.

**விளக்கப்படம் 11: மாணவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளின் வகைகள்**





**விளக்கப்படம்** 12 மற்றும் 13 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, பாடசாலைகளில் நிகழும் பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பான (உடல், உள, வாய்மொழி மூலம்) சம்பவங்களையும் சில மாணவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான பாகுபாடுகள் தொடர்பான சம்பவங்கள் இரண்டாம் கட்ட ஆய்வின் போது கோரளைப்பற்று தெற்கு பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தன. துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான அசௌகரியங்கள் குறித்து இரண்டாம் கட்ட ஆய்வில் சில சம்பவங்கள் தெரிவிக்கப்பட்ட போதும் ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது அவை தொடர்பிலான சம்பவங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை காணக்கூடியதாக இருக்கிறது. எண்ணிக்கையளவில் இவை மிகக் குறைவானதாக காணப்படுகிறபோதிலும் இவ்வாறன விடயங்கள் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும், ஏனெனில் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாகுபாடு ஆகியவை பாடசாலைகளில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் மீது தீவிர தாக்கங்களைக் கொண்டுள்ளன.

**விளக்கப்படம் 12: பாடசாலைகளில் இடம்பெறும் பாகுபாடுகள்**




**விளக்கப்படம் 13: பாடசாலைகளில் நிகழும் துஷ்பிரயோகங்கள்**




ஆசிரியர்கள் சார்ந்த சிக்கல்கள், கல்வியின் தரத்தைப் பாதிக்கலாம். படம் 14 இல் விளக்கப்பட்டுள்ளபடி, இரண்டாம் கட்ட ஆய்வில், நான்கு பிரிவுகளிலும் ஆசிரியர்கள் தொடர்பிலான பிரச்சனைகள் குறித்து மாணவர்கள் தெரிவித்தனர். ஆசிரியர்கள் தொடர்பிலான விடயங்கள், ஏறாவூர் DS பிரிவில் கணிசமானளவு குறைவாகவே காணப்படுகின்ற அதே நேரத்தில் ஏனைய மூன்று பிரிவுகளிலும் எதுவித மேம்பாடுகளும் காணப்பட்டிருக்கவில்லை.

இரண்டாம் கட்ட ஆய்வில் நான்கு DS பிரிவுகளிலும், ஆசிரியர்களுக்கான வசதிகள் இல்லாதது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருக்கிறது. உள்ளக கிராமங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகளுக்கு போதிய போக்குவரத்து வசதிகளின்மையானது, ஆசிரியர்கள் பாடசாலைக்கு தாமதமாக வருகை தருவதற்கும் பாடசாலையிலிருந்து நேரத்துடன் செல்வதற்கும் வழிவகுக்கின்ற காரணத்தால் இந்த விடயமானது, ஆசிரியரின் வருகையின்மையுடன் நேரடியாக தொடர்புபடுகிறது. போறத்தீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு பிரிவுகளில் மிகத்தெளிவான விடயமாக காணப்படுகிறது. எனினும் பொதுவாகவே ஆசிரியர்கள் வகுப்பறையில் செலவளிக்கும் நேரத்தை விட வெளியில் செலவளிக்கும் நேரமே அதிகம் என பதிலளித்தவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

**விளக்கப்படம் 14: ஆசிரியர்கள் தொடர்பான சிக்கல்கள்**



# 3. இரண்டாம் நிலை கல்வி வழங்கலுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள்

விளக்கப் படம் 15 இல் மூன்று DS பிரிவுகளில் இரண்டாம் நிலைக் கல்வி சேவைகள் வழங்கல் தொடர்பான செயல்திறனுக்கு வழங்கப்பட்ட மதிப்பீட்டை சுட்டிக்காட்டப்படுகின்றது. இரண்டாம் நிலைக் கல்வி சேவைகளின் திருப்தியான பயனர்களின் சதவீத அடிப்படையில் இம்மதிப்பீடு வழங்கப்படுகிறது.

**விளக்கப்படம் 15** இல் காட்டப்பட்டுள்ள நிறக்குறியீடுகள் பின்வருவனவற்றை குறிக்கின்றன.

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| சிவப்பு | 40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| மஞ்சள் | 40% - 60% இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| பச்சை | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் | செயற்திறனைப் பராமரிக்க வேண்டும் அல்லது தொடர்ச்சியான முன்னேற்றங்கள் தேவை |

**திருப்தியான பயனர்களுள் உயர்ந்த மற்றும் நடுத்தர திருப்தியடைந்த சேவை பயனர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்*

**விளக்கப்படம் 15** இல் காட்டுள்ளவாறு இரண்டாம் நிலை கல்விச் சேவை வழங்கல் தொடர்பிலான இரண்டாம் கட்ட ஆய்வின் போது சில பகுதிகளில் சேவை வழங்கலுக்கான மதிப்பீடுகள் மேம்பட்டு இருந்தன (மேல்நோக்கி காட்டும் அம்புக்குறிகள் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளது) அட்டவணையில் எல்லா பகுதிகளும் பச்சை நிறத்தில் குறிக்கப்பட்டுள்ள அதே வேளையில் செயற்பாட்டு திட்டத்தில் (பின்னிணைப்புகளைப்பார்க்க) அடையாளப்படுத்தப்பட்ட குறுகிய கால மற்றும் நீண்டகால இலக்குகளை அடைய நடவடிக்கை எடுப்பதற்கு முன்னோக்கி செல்லும் போது இதே செயற்திறனை பேணுவது முக்கியமானதாகும். . இந்த பகுதிகளில் திருப்தி அளவுகள் அதிகரித்துள்ளன (மேல்நோக்கி குறிக்கப்பட்ட அம்புகள் சுட்டிக்காட்டுகின்றன). இருப்பினும் மேலும் மேம்பாடு செய்வதற்கான தேவை உள்ளது.

**விளக்கப்படம் 15: இரண்டாம் நிலை கல்விச்சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு**

| | குடிநீர் | கழிவறை | நூலகம் | விஞ்ஞான ஆய்வுக்கூடம் | மதிய உணவு | பாடப்புத்தகங்கள் | கணினிக்கூடம் | ஆசிரியர்கள் | சமையலறை | சுரக்ஷா காப்புறுதி | சீருடை கூப்பன்கள் | சிற்றுண்டிச்சாலை | விளையாட்டு மைதானம் | எல்லைச்சுவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆய்வு 1** | | | | | | | | | | | | | | |
| ஏறாவூர் நகர் | 99% ↓ | 99% ↑ | 97% ↑ | 95% ↑ | 95% ↑ | 98% ↑ | 97% ↑ | 98% ↑ | 96% ↑ | 73% ↓ | 93% ↑ | 92% ↑ | 90% ↑ | 91% ↓ |
| கோரளைப்பற்று தெற்கு | 94% ↓ | 90% ↓ | 93% ↑ | 83% ↓ | 89% ↓ | 97% ↑ | 80% ↓ | 98% = | 79% ↑ | 90% ↑ | 96% ↑ | 85% ↓ | 74% ↑ | 82% = |
| மண்முனை தென்மேற்கு | 89% ↑ | 95% ↑ | 88% ↓ | 85% ↑ | 93% = | 95% ↑ | 74% ↑ | 98% ↓ | 93% ↓ | 96% ↑ | 100% ↑ | 87% = | 65% ↓ | 75% ↓ |
| போறத்தீவு பற்று | 92% = | 88% ↓ | 96% ↑ | 97% ↑ | 99% ↓ | 100% ↓ | 92% ↑ | 99% ↓ | 99% ↑ | 100% = | 100% ↑ | 93% ↓ | 82% ↑ | 82% ↑ |
| **ஆய்வு 2** | | | | | | | | | | | | | | |
| ஏறாவூர் நகர் | 100% | 95% | 88% | 87% | 87% | 95% | 92% | 96% | 86% | 79% | 79% | 90% | 89% | 94% |
| கோரளைப்பற்று தெற்கு | 97% | 96% | 90% | 90% | 97% | 89% | 84% | 98% | 86% | 80% | 88% | 88% | 70% | 82% |
| மண்முனை தென்மேற்கு | 85% | 87% | 89% | 91% | 93% | 94% | 82% | 99% | 95% | 91% | 89% | 87% | 73% | 83% |
| போறத்தீவு பற்று | 92% | 97% | 89% | 85% | 95% | 95% | 89% | 95% | 83% | 100% | 92% | 96% | 71% | 80% |

| | |
|---|---|
| (சிவப்பு) | 40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் |
| (மஞ்சள்) | 40% - 60% இற்கு இடைப்பட்ட திருப்தியுடைய பயனர்கள் |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் |

# 4. பரிந்துரைகள்


## 4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்

### 4.1.1. உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்


பதிலளிப்பாளர்களால் அடையாளம் காணப்பட்ட உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முடிவுகள் காட்டி நிற்கின்றன. இவை, விளக்கப் படங்கள் 16, 17, 18மற்றும் 19 ஆகியவற்றில் ஒவ்வொரு பிரதேச பிரிவுகள் அடிப்படையில் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

ஏறாவூர்பற்று மற்றும் கோரளைப்பற்று தெற்கு பிரிவுகளில் உடனடி மேம்பாட்டுக்காக முன்னுரிமைப்படுத்தப்பட்ட முக்கிய சேவைகளில், விளையாட்டு மைதான வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் கணனிக் கூடங்களை உள்ளடக்குகிறன. போறதீவுப்பற்று பிரிவில் முக்கியமான முன்னுரிமையாக விளையாட்டு மைதானம், மலசலகூட சுகாதார வசதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை வசதிகள் காணப்படுகிறன. மண்முனை தென்மேற்கு பிரிவில் உடனடி மேம்பாட்டுக்கான முன்னுரிமையாக விஞ்ஞான ஆய்வுகூடம், கணணிக்கூடம் மற்றும் வசதிகளுடன் கூடிய பாடசாலைக் கட்டடம் ஆகியன காணப்படுகிறன. உடனடி நடவடிக்கைகளாக இந்த முன்னுரிமைப் பகுதிகள் கருதப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது.


**விளக்கபபடம் 16: ஏறாவூர்பற்று DS பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**




**விளக்கப்படம் 17: போறதீவுப்பற்று பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**




**விளக்கப்படம் 18: மண்முனை தென்மேற்கு பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**



**விளக்கப்படம் 19: கோரளைப்பற்று தெற்கு பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**




## 4.1.2. மேம்பாட்டிற்கான பரிந்துரைகள்

பொதுவாக இரண்டாம் நிலை கல்விச்சேவைகள் தொடர்பாக பதிலளித்தவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்திய அதே வேளை திருப்தியின்மைக்கான காரணங்களாக அணுகும் வசதியில் உள்ள சிக்கல்கள், போதியளவு வசதிகளின் குறைபாடு, இருக்கும் வசதிகளை பராமரிப்பதில் உள்ள குறைபாடுகள், உரிய அதிகார நிறுவனங்களிடம் இருந்து முறையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையிடலில் குறைபாடுகள் என பல்வேறு விடயங்களை அடையாளப்படுத்தினர். இரண்டாம் நிலைக் கல்விச் சேவை வழங்கலில் மேம்பாட்டிற்கான ஆலோசனையாக உரிய அதிகார நிறுவனங்களிடம் இருந்து சிறந்த கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை மற்றும் பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாகுபாடுகளை தவிர்ப்பதற்கான அளவீடுகள் என்பன பதிலளிப்பாலர்களால் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது. அத்தோடு இரண்டாம் நிலைக்கல்வி வழங்கல் சேவையின் முன்னேற்றத்தை பின்தொடர வருடத்தில் ஒரு முறையேனும் இது போன்ற ஆய்வுகள் வலயக் கல்விப் பணிமனைகளால் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஒரு ஆலோசனை அவர்களால் முன்வைக்கப்பட்டது.

## 4.1.3. ஏனைய பரிசீலனைகள்

இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட கண்டறிவுகளாவன இரண்டாம் நிலைக் கல்வி துறைக்கான முன்னேற்றங்கள் மற்றும் சீர்திருத்தங்களை திட்டமிடுவதற்கான ஒரு சிறந்த அளவுக்கோலினை வழங்குகின்றது (குறிப்பாக விளக்கப் படம் 16 இல் தரப்பட்ட மதிப்பீடுகள் வழங்குகின்றது. இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட சேவை வழங்கல் இடைவெளிகளை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும் என்பதை புரிந்துகொள்ள இவ்விடயம் மேலும் நெருக்கமாக ஆராயப்பட வேண்டும்.

நான்கு DS பரிவுகளிலும் உள்ள இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலை முன்னேற்றுவதற்கான எதிர்கால தலையீடுகளை திட்டமிடுவதற்கு,அடையாளப்படுத்தப்பட்ட உடனடி சேவை முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளை எதிர்கால திட்டமிடல் நடவடிக்கைகளின்போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 4.2. முன்னோக்கிய நகர்வு

முதலாம் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வின் ஆரம்ப கண்டறிவுகளை அடிப்படையாகக்கொண்டு செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் அரச சிரேஷ்ட அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதி பணிப்பாளர்கள் மற்றும் சமூக பிரதிநிதிகளுக்கு கண்டறிவுகள் வழங்கப்பட்டன. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையை இரண்டாவது செயற்பாட்டிற்கு முன்னர் சேவைகளை (2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில்) முன்னேற்றுவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையாளம் காணும் செயற்பாட்டு திட்டங்களை உருவாக்குவதற்கு சேவை வழங்குநர்கள் மற்றும் சேவை பெறுனர்களுக்கிடையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாட்டு திட்டங்கள் குறிப்பாக சேவை வழங்குநர்களின் முன்னேற்றத்தையும் பொறுப்புணர்வையும் கண்காணிக்கும் வகையில் CSO களுக்கு பயனுள்ளதாக இருக்கும். 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இடண்டாம் இலத்திரனியல் குடிமக்கள் அட்டை ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இது இரண்டாம் நிலை கல்விச் சேவை வழங்கலின் முதலாம் eCRC ஆய்வின் தொடர்ச்சியாக அமைந்தது. கீழ்வரும் நிறக்குறியீடு அட்டவணை திருப்தி அளவை மற்றும் முன்னுரிமை அளவை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது. விளக்கப் படம் 15 முதற் கட்ட ஆய்வுக்கும் இரண்டாம் கட்ட ஆய்வுக்கும் இடையே உள்ள ஒப்பீட்டை சுட்டிக்காட்டுகின்றது.

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| (சிவப்பு) | 40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| (மஞ்சள்) | 40% - 60% இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் | செயற்திறனைப் பராமரிக்க வேண்டும். அல்லது முன்னேற்றங்கள் தொடர வேண்டும். |

**திருப்தியான பயனர்களுள் உயர்ந்த மற்றும் நடுத்தர திருப்தியடைந்த சேவை பயனர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்*

ஒரு நிறமாற்றம் தெளிவாக இல்லை என்றாலும் திருப்தி வீதத்தில் ஏற்படுகின்ற ஒரு அதிகரிப்பு சேவை வழங்கல் அடிப்படையில் ஒரு முன்னேற்றமாக கருதப்படுகின்றது. மேம்பட்ட திருப்தி அளவை பொறுத்தவரையில் பொதுவாக முதலாம் eCRC ஆய்வு கண்டறிவுகளாவன சேவை வழங்குநர்களுக்கும் பயனர்களுக்குமிடையில் ஒரு பயனுள்ள உரையாடலை மேற்கொள்ள விழிப்புணர்வையும் ஊக்குவிபையும் வழங்கியது. இது பயனர்களிடையே அதிக திருப்தி அளவீடுகள் சென்றடைய வழிவகுத்தது மட்டுமல்லாமல் சில இடங்களில் சேவைகளை

மேம்படுத்துவதற்கு சேவை வழங்குநர்கள் அதிக நடவடிக்கை எடுக்கவும் தூண்டுதலாக அமைந்தது. எனவே முன்னேற்ற விளக்கப் படம் 15 இல் பல நன்மைகளை சுட்டிக்காட்டுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு பொது சேவை வழங்கல் தொடர்பான திருப்தியளிக்கும் தகவலை சேவை வழங்குநர்களிடம் வழங்கும் வாய்ப்பை மற்றும் கூடுதலான பொறுப்பை வலியுறுத்த இது வாய்ப்பு வழங்குகின்றது. பொது மக்கள் பிரதிநிதிகள் பொது மக்களை பிரதிநித்துவப் படுத்த ஒரு பயனுள்ள கருவியாக அமைகிறது. மற்றும் முதற் கட்டத்தில் இருந்து இரண்டாம் கட்டத்திற்கு எவ்வாறு சேவை வழங்கல் முன்னேறியுள்ளது என கண்டறியலாம்.

இந்த இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களை சிக்கல் நிறைந்த பகுதிகள் குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தலாம். இரண்டாம் நிலை கல்வி வழங்கலின் சிக்கலான அடிப்படை பிரச்சனைகளை குறிக்கின்ற சமூகக் கருத்துகளை அடிப்படையாகக்கொண்ட அடையாளம் சார்ந்த பதிவுகள்தான் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் கண்டறிவுகள் என்பதை நினைவில் கொள்ளவும். இத்தகைய சிக்கல்களோடு இணைந்துள்ள காரணங்களை புரிந்துக்கொள்ள ஆழமான ஆய்வு தேவைப்படலாம்.

இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பின்வருவனவற்றை பரிந்துரைக்கலாம்.

- இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக பலவீனமான சேவை வழங்கல் செயற்பாடுள்ள பிரதேசங்களை அடையாளம் காணுதல்
- சேவைகளை முன்னேற்ற பூர்த்திசெய்யப்படவேண்டிய இடைவெளிகளை கண்டறிந்து திறமையான கல்வி சேவை வழங்களினை தடுக்கின்ற காரணங்கள் மற்றும் காரணிகளை பற்றி விசாரணை செய்தல்
- தலையீடுகளின் செயற்கையானது கல்விச் சேவை வழங்களின் இடைவெளியினை அடையாளம் காண்பதற்கு தேவைப்படுகிறது.
- சேவை வழங்கல் இடைவெளிகள் அடையாளம் காணப்பட்டவுடன் சேவை பயனர்களின் திருப்தி மட்டங்களை தொடர்ந்து தரநிலை குறியீட்டு மட்டங்களில் இருந்து வழங்கல் செயற்பாடு மேம்பட்டதா என்பதை தீர்மானிப்பதற்கு பயனுள்ளதாக இருக்கின்றது.

## இணைப்பு 1: செயற்பாட்டுத் திட்டங்கள்

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்வி சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - மட்டக்களப்பு மத்திய கல்வி வலய அலுவலகம்**

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சுரக்ஷா காப்புறுதி | குறுங்காலம் | அதிபர் | ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் சர்வதேச பொது சேவைகள் (PSI) | 07/05/2018 | 04/08/2018 | பிரதிக்கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |
| 2 | பாடப்புத்தகங்கள் | குறுங்காலம் | அதிபர் | பொறுப்பான ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் | 07/05/2018 | 07/07/2018 | நேரடி நுழைவு அதிகாரி (DEO), ஏறாவூர் |
| 3 | சீருடை | குறுங்காலம் | அதிபர் | பொறுப்பான ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் | 07/05/2018 | 07/07/2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |
| 4 | நூலகம் | குறுங்காலம் | அதிபர் | நூலகத்துக்கு பொறுப்பாகவுள்ள ஆசிரியர், பாட ஆசிரியர்கள் | 07/05/2018 | 04/08/2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |
| 5 | விளையாட்டு மைதானம் | நீண்டகாலம் | அதிபர் | ஆரசியல்வாதிகள், அபிவிருத்தி மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், விளையாட்டு உபகரணங்கள் | 07/05/2018 | 06/05/2020 | பாடசாலை அபிவிருத்தி சங்கம் (SDC) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | எல்லைச்சுவர் | நீண்டகாலம் | அதிபர் | அரசியல்வாதிகள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் | 07/05/2018 | 06/05/2019 | ISW, உதவிக் கல்விப் பணிப்பாளர், உளவியல் கல்வி |
| 7 | விஞ்ஞான ஆய்வுக்கூடம் | நீண்டகாலம் | அதிபர் | அரசியல்வாதி, பாடசாலை அபிவிருத்தி சங்கம் (SDC), விஞ்ஞான ஆசிரியர், ஆய்வுக்கூட உதவியாளர் | 07/05/2018 | 06/12/2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர்-அபிவிருத்தி, தனிப்பட்ட திறன் கணிப்பீடு விஞ்ஞானம் (ISA Science) |
| 8 | சிற்றுண்டிச்சாலை | நீண்டகாலம் | அதிபர் | ஆசிரியர்கள், அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவீஷ் நிறுவனம், உடல்நல பரிசோதகர், PSI, ஆசிரியர்கள், | 07/05/2018 | 06/05/2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்வி சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்**

| தொ. இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம் அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/ தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சுரக்ஷா காப்புறுதி தொடர்பாக தெளிவான மற்றும் விரிவான விழிப்புணர்வினை வழங்குதல் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA | மே 2018 | செப்டம்பர் | வலயக் கல்வி அலுவலக் |
| 2 | சிற்றுண்டிச்சாலை | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA | மே 2018 | செப்டம்பர் | வலயக் கல்வி அலுவலக் |
| 3 | மதிய உணவுகள் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | SDC, OBA | மே 2018 | செப்டம்பர் | வலயக் கல்வி அலுவலக் |
| 4 | பாடப்புத்தகங்கள் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | பிரதேசக் கல்விப் பணிப்பாளர் | மே 2018 | செப்டம்பர் | வலயக் கல்வி அலுவலகம் |
| 5 | குடிநீர் | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | SDC, OBA | ஜுன் 2018 | டிசம்பர் | வலயக் கல்வி அலுவலகம் |
| 6 | சுகாதாரம் | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | SDC, OBA | ஜுன் 2018 | ஜுன் 2018 | வலயக் கல்வி அலுவலகம் |
| 7 | ஆசிரியர்களின் பற்றாக்குறை | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | வலயக்கல்விப் பணிப்பாளர் | ஜுன் 2018 | ஜுன் 2018 | வலயக் கல்வி அலுவலகம் |
| 8 | நூலகம் | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | SDC, OBA | ஜுன் 2018 | ஜுன் 2018 | வலயக் கல்வி அலுவலகம் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி**

| தொ. இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் வசதிகள்** | | அதிபர் | மண்முனை தென்மேற்கு பிரதேச சபை | மே 2018 | மே 2018 | பாடசாலை அபிவிருத்தி சங்கம் - SDC- |
| | I. கடுக்காமுனை வாணி வித்தியாலயம் மற்றும் கொக்கட்டிச்சோலை I.K.M.V போன்றவற்றுக்கு பிரதேச சபையினால் தொடர்ச்சியாக மற்றும் ஒழுங்கான முறையில் குடிநீர் வழங்கப்படுவதை உறுதிசெய்தல் | குறுங்காலம் | | | | | |
| | II.இந்த வலயத்திலுள்ள 21 பாடசாலைகளின் நீரின் தரம் குறித்து விழிப்புணர்வளித்தல் மற்றும் விளக்குதல் | குறுங்காலம் | அதிபர் | உடல் சுகாதார பரிசோதகர் | மே 2018 | ஜுன 2018 | பாடசாலை அபிவிருத்தி சங்கம் - SDC- |
| 2 | **சுரக்ஷா மாணவர் காப்புறுதி** | | அதிபர் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல் | மே 2018 | ஜுன் 2018 | பாடசாலை மட்டத்தில் சுரக்ஷா காப்புறுதியின் பொறுப்பாளர் |
| | பாடசாலை மட்டத்தில் சுரக்ஷா காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மீள ஒழுங்கு செய்தல் | குறுங்காலம் | | | | | |
| 3 | **கழிவறை வசதிகள்** | | சுகாதார கழகத்திற்கு பொறுப்பான ஆசிரியர் | பிரதி அதிபர் | மே 2018 | ஒக்டோபர் 2018 | வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிநிதிகள் |
| | I. பாடசாலை மட்டத்தில் சுகாதார கழகங்களுக்கு அதிகாரமளித்தல் | குறுங்காலம் | | | | | |
| | II. கடுக்காமுனை வாணி பாடசாலைக்கு வில்லு நீர்த்தாங்கியிலிருந்து வெளியக காரணங்களுக்காக நீரினைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிளை ஒழுங்கு செய்தல். | நீண்டகாலம் | அதிபர் | மண்முனை தென்மேற்கு பிரதேச சபை | ஜுன் 2018 | ஜுலை 2019 | அதிபர் |
| | III. கோக்கட்டிச்சோலை K.M வித்தியாலயத்திற்கான கழிவறைகளை மீள்நிர்மாணித்தல் மற்றும் புதிதாக கட்டுவித்தல; | நீண்டகாலம் | | மாகாண கல்வித் திணைக்களம் | ஜுன் 2018 | ஜுன் 2019 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | IV. கொக்கட்டிச்சோலை சமூகம் அடிப்படையிலான அமைப்புகளுடன் கலந்துரையாடல் மற்றும் விழிப்புணர்வினை மேற்கொள்ளுதல் (கோவில் பக்தர்கள் பாடசாலை கழிவறைகளைப் பயன்படுத்துதல்) | குறுங்காலம் | அதிபர் | கிராமிய அபிவிருத்தி சங்கம் | ஜுன் 2018 | ஜுன் 2018 | அதிபர் |
| 4 | **நூலகத்தினைப் பயன்படுத்துதல்** | குறுங்காலம் | | | | | |
| | வாரத்திற்கு ஒரு மறை என 15 நிமிடங்களுக்கு மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கு அதேபோல நூலக பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கு காலைக்கூட்டங்களை நடாத்துதல் | குறுங்காலம் | அதிபர் | பிரதி அதிபர் | ஜுன் 2018 | ஒக்டோபர் 2018 | வலயக் கல்வி அலுவலகதின் பிரதிநிதிகள் |
| 5 | **விஞ்ஞான ஆய்வுக்கூட பயன்பாடு** | குறுங்காலம் | | | | | |
| | I. ஆய்வுக்கூட நடவடிக்கைகள் மற்றும் பொருத்தமான உபகரணங்கள் மற்றும் உபகரணங்களை தயார்செய்வதற்கான பயிற்சி | குறுங்காலம் | பிரதிக் கல்விப்பணிப் பாளர் - விஞ்ஞானம் | சேவை ஆலோசகர் (விஞ்ஞானம், ) வேல்ட் விசன் லங்கா | மே 2018 | மே 2018 | பிரதிக்கல்வி பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி |
| | II. விஞ்ஞான செயல்முறை பாடங்கள் தொடர்பாக மாணவர்களுக்கான செயலமர்வுகள் | குறுங்காலம் | பிரதிக் கல்விப்பணிப் பாளர் - விஞ்ஞானம் | சேவை ஆலோசகர் (விஞ்ஞானம், ) | ஆகஸ்ட் 2018 | ஆகஸ்ட் 2018 | பிரதிக்கல்வி பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி |
| | III. விஞ்ஞான செயல்முறை பாடங்களுக்கான உபகரணங்களை வழங்குதல் | குறுங்காலம் | பிரதிக் கல்விப்பணிப் பாளர் - விஞ்ஞானம் - | வேல்ட் விசன் லங்கா | ஜுன் 2018 | ஜுன் 2018 | பிரதிக்கல்வி பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி |
| 6 | **கணினிக்கூடம்** | | | | | | |
| | I. பாடசாலைகளுக்கு கணினிகளை வழங்குதல் | நீண்டகாலம் | பிரதிக்கல்வி பணிப்பாளர் - திட்டமிடல் | மாகாண கல்வி திணைக்களம் | ஜுலை 2018 | ஜுலை 2019 | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| | II. மிகையான கணினிகள் காணப்படுகின்ற பாடசாலைகளில் இருந்து கணினகளைப் பெற்று கணினிகள் தேவைப்படும் பாடசாலைகளுக்கு வழங்குதல் | குறுங்காலம் | பிரதிக்கல்வி பணிப்பாளர் - திட்டமிடல் | தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப பாட ஒருங்கிணைப்பாளர் | செப்டம்பர் 2019 | செப்டம்பர் 2019 | வலயக் கல்விப் பணிப்பாளர் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | **விளையாட்டு மைதானம் தொடர்பாக** | | | | | | |
| | I. விளையாட்டு மைதான வசதிகளற்ற பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதற்பான இடம்/விளையாட்டு மைதானம் ஒன்றினை அடயாளம் காணல் | குறுங்காலம் | உதவிக் கல்விப் பணிப்பாளர் - பௌதிகக் கல்வி | சேவை ஆலோசகர் (பௌதிக கல்வி) மற்றும் பிரதேச செயலகம் | செப்டம்பர் 2018 | செப்டம்பர் 2018 | பிரதிக்கல்விப் பணிப்பாளர் - கல்வி முகாமைத்துவம் |
| | II. விளையாட்டு மைதான வசதிகள் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்தல் மற்றும் விளையாட்டு மைதான வசதிகள் காணப்படாத பாடசாலைக்கான மைதானத்தை பெற்றுத்தருவதற்கான வழிகளை கண்டறிதல் | நீண்டகாலம் | பிரதிக்கல்வி பணிப்பாளர் - திட்டமிடல் | மாகாண கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் | ஆகஸ்ட் 2018 | ஆகஸ்ட் 2018 | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| 8 | **கற்பித்தல் அணுகுமுறைகள்** | | | | | | |
| | மாணவர்களிடம் மறைந்திருக்கின்ற திறன்கள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கு சாதகமான கற்பித்தல் மற்றும் பலப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆசிரியர்களுடன் இணைந்து உதவுதல் | குறுங்காலம் | அதிபர் | வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிநிதிகள் | மே 2018 | டிசம்பர 2018 | வலயக்கல்வி பணிப்பாளர் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - கல்குடா வலயக் கல்வி அலுவலகம்**

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குடிநீர் வசதிகள் | 1) ருந்து சுத்தமான குடிநீரினைக் கொண்டுவருவதற்கு மாணவர்களை ஊக்குவித்தல் வீட்டிலி<br>2) நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் | பேற்றோர்கள் மற்றும் ஆசிரியர் | பிரதேச சபை | 01 ஜுன் 2018 | 31 ஆகஸ்ட 2018 | பாடசாலை முகாமைத்துவக் குழு |
| 2 | குழிவறை வசதிகள் | 1) குாணப்படுகின்ற கழிவறைகளை பயன்படுத்துவதற்கு சாத்தியமான விழிப்புணர்வினை வழங்தல்<br>2) சழிவறைகளுக்கு பயன்படுத்துவதற்காக கலன்களில் நீரனைக் கொண்டுவருவதற்கு மாணவர்களை ஊக்குவித்தல்<br>3) மழைசீரை சேமப்பதற்கான நடவடிக்கைகளை கண்டறிதல்<br>4) சமூக அடிப்படையிலான அமைப்புகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் | பொறுப்பாசிரியர் மற்றும் சுகாதாரக் கழகம் | ஐளுயு- சுகாதாரம், பௌதிக கல்வி | 02 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவக் குழு |
| 3 | நூலகம் | 1) நூலகத்தினை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வினை வழங்குதல்<br>2) நூலகப் பாடத்தினை நடைமுறையில் அமுல்படுத்துவதை உறுதிசெய்தல்<br>3) நடமாடும் நூலகத்தினை வகுப்பறையில் அமுல்படுத்துதல்<br>4) புத்தகங்களை சேகரிப்பதன் மூலம் தற்காலிகமான நூலகத்தினையாவது உருவாக்குதல்<br>5) நிலையான நூலகங்களை | அதிபர், நூலகப் பொறுப்பாசிரியர் | ISA, நூலக சேவை | 01 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவக் குழு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் | | | | | |
| 4 | விஞ்ஞான ஆய்வுக்கூடம் | 1 ஆய்வுக்கூட பயன்பாடுகள் குறித்து விழிப்புணர்வழித்தல்<br>2 தற்போதைய ஆய்வுக்கூடத்தினை பயத்துவதை உறுதிசெய்தல்<br>4) நிரந்தர ஆய்வுக்கூடத்தினை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல் | பாடசாலை முகாமைத்துவ குழு | ISA, விஞ்ஞானம் | 01 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 5 | மதிய உணவு | தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு தரமான மதிய உணவினை வழங்குவதை உறுதிசெய்தல் | அதிபர் | ISA- சுகாதாரம், பௌதிகக் கல்வி | 02 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 6 | பாடப்புத்தகங்கள் | 1) பாடப்புத்தகங்களை மீள பயன்படுத்துதல் தொடர்பாக விழிப்புணர்விழித்தல்<br>2) யார் பாடப்புத்தகங்களை நன்றாக பராமரிப்பது அதேபோல திருப்பியளிப்பது தொடர்பாக போட்டியினை முன்னெடுத்தல்<br>3) மீள பயன்படுத்துவதற்கு பொருத்தமான பாடப்புத்தகங்களை பெற்றுக்கொள்வதற்கு அருகிலுள்ள பாடசாலைகளுடன் தொடர்பினை பேணுதல் | பொறுப்பாசிரியர் | வலயக்கல்விப் பணிப்பாளர் | 03 ஜுன 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 7 | கணினிக்கூடம் | தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு தரமான கணினிப்பயன்பாட்டினைப் பயன்படுத்துதல் | பொறுப்பாசிரியர | அதிபர் | 04 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 8 | ஆசிரியர்கள் | 1) கிராம மட்டத்தில் கல்விகற்ற இளைஞர்களிடமிருந்து உதவிகளைப் பெறுதல்<br>2) அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்<br>3) உசைஉடந தரத்தினை உறுதி செய்தல்<br>4) நடமாடும் ஆசிரியர் | ஊதவிக் கல்விப் பணிப்பாளர் | வுலயக் கல்விப் பணிப்பாளர் | 01 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சேலைவகளை அமுல்படுத்துதல்<br>5) வகுப்பறைகளில் பாடங்கள் நடாத்தப்படுவதை உறுதிசெய்தல்<br>6) பொருத்தமான பாடங்களுக்கு தேவையான ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் | | | | | |
| 9 | சமையலறை | பாடசாலைக் கண்காணிப்புக் குழுவொன்றினை நியமித்தல் | வலய உத்தியோகத்தர்கள் | பாடசாலை அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் | 02 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 10 | சுரக்ஷா காப்புறுதி | 1) வகுப்பு அடிப்படையில் மாணவர்களுக்கு அறிவுறுத்துதல்<br>2) மாணவர் கூட்டங்களின் போது மாணவர்களுக்கு அறிவுறுத்தல்<br>3) பெற்றோர்களுக்கு விழிப்புணர்வளித்தல் | அதிபர், வகுப்பாசிரியர் | வலயக் கல்விப் பணிப்பாளர் | 03 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 11 | சீருடை | 1) தரமான சீருடைத் துணிகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வளித்தல்<br>2) பெற்றோர்களுக்கு விழிப்புணர்வளித்தல் | பொறுப்பாசிரியர் | வலளயக்கல்விப் பணிப்பாளர் | 04 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 12 | சிற்றுண்டிச்சாலை | 1) சிற்றுண்டிச்சாலைகளின் தரத்தினை உறுதிசெய்தல்<br>2) போசாக்கான உணவுகளை வழங்குவதை உறுதிசெய்தல்<br>3) உணவுகள் மற்றும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்துதல்<br>4) சுகாதாரமற்ற உணவுகளை தடுப்பதற்கான விழிப்புணர்வினை வழங்குதல் | பாடசாலை முகாமைத்துவ குழு | பாடசாலை அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் | 01 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 13 | விளையாட்டு மைதானம் | நலன் விரும்பிகள், பிரதேச சபை ஆதரவாளர்கள் | பாடசாலை முகாமைத்துவக் குழு | பிரதேச சபை உறுப்பினர்கள் | 02 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |
| 14 | எல்லைச்சுவர் | நலன் விரும்பிகள், பிரதேச சபை ஆதரவாளர்கள | பாடசாலை முகாமைத்துவக் குழு | பிரதேச சபை உறுப்பினர்கள | 03 ஜுன் 2018 | | பாடசாலை முகாமைத்துவ குழு |

“சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக அபிவிருத்தியை எட்டும் பொருட்டு பொதுமக்கள் சார் சமூக அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்குமிடையேயுள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்” எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் கீழ் வறுமை ஆராய்ச்சி நிலையமானது மட்டகளப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளை (eCRC) மேற்கொண்டது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளானது (eCRC), தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப்பகுதியில் காணப்படுகின்ற

(i) பிரதேச சபையின் சேவைகள் வழங்கல்
(ii) இரண்டாம் நிலை கல்விச்சேவை வழங்கல்

ஆகிய இரண்டு துறைகளின் சேவைத்தரம், சேவை வழங்குனர்களின் பொறுப்பு மற்றும் சேவை முன்னேற்றங்களை வேண்டி நிற்கினற பகுதிகள் போன்றவற்றினை தீர்மானிப்பதை இலக்காக கொண்டிருந்தது. தற்போது பொதுசேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் அணுகல், தரம் மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுவதற்கான கருவியாக அதேபோல சமூகப் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையினை (eCRC) பயன்படுத்த முயற்சிக்கும் நோக்குடன் முதலாவது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) கண்டறிவுகளை இந்த அறிக்கையானது வழங்குகின்றது. மூன்று மாவட்டங்களில் இருந்து பதிலளித்தவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட சேவை வழங்கலில் உடனடி கவனம் மற்றும் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) முடிவுகளானது வெளிக்காட்டி நிற்கின்றன. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) ஆரம்ப முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதோடு சேவை வழங்குனர்கள் மற்றும் சேவை பெறுபவர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்த ஆய்வின் கண்டறிவுகளை பரவலாக்குவதற்கும், செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறைச் சீர்த்திருத்தங்கள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு இத்தகவல்களை பயன்படுத்துவதற்கும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.




29 ஆர்.ஜி சேனநாயக்க மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி: +94(011) 2676 955, 4690200
தொலைநகல்: +94(011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk


centre for poverty analysis

European Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

ACTED

ISBN: 978-955-3628-43-5